# குழிகள் மிகுந்த சாலைகளால் சிகாம்புட் மக்கள் அதிருப்தி

(நமது நிருபர்)

கோலாலம்பூர், டிச.2-
தங்கள் பகுதியிலிருக்கும் சாலையை மறு நிர்மாணிப்புச் செய்யும்படி கோலாலம்பூர் மாநகர் மன்றத்தை தாமான் ஸ்ரீ சிகாம்புட்டைச் சேர்ந்த சூரியா ஹோம்ஸ் பகுதி மக்கள் வலியுறுத்துகின்றனர்.

தலைநகரில் ஜாலான் ஊடாங் காலா, ஜாலான் ஊடாங் பத்து ஆகிய சாலைகளில் குழிகள் நிறைந்திருப்பதாக சூரியா ஹோம்ஸ் குடியிருப்பாளர்கள் சங்கத் தலைவர் மைக்கல் யென் தெரிவித்தார்.

மாநகர் மன்றம் நியமித்த குத்தகையாளர்கள் பழுதான சாலையை மீண்டும் நிர்மாணிக்க இப்பகுதியில் 142 வீடுகள் உள்ளன. ஜாலான் ஊடாங் காலா 4, 5, 6 உட்பட 5 முதன்மைச் சாலைகள் இங்கு உள்ளன. பெரும்பாலானவை மோசமான நிலையில்தான் உள்ளன.



ஜாலான் ஊடாங் காலாவில் சாலை முகப்புப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணப்படும் என்று குடியிருப்புப் பகுதி மக்கள் எதிர்பார்ப்பதாகச் செய்தியாளர்களிடம் பேசிய போது மைக்கல் யென் குறிப்பிட்டார்.